# Academic Master Plan 2025-2026

## ALPS, Chokanad

Scanned with OKEN Scanner

# கல்விசார் முதன்மை திட்டம் 2025 - 2026

## அரசு உதவி பெறும் ஆரம்பப்பள்ளி, சொக்கநாடு.

முன்னுரை:

நமது பள்ளியின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் இந்த கல்வியாண்டின் இறுதிக்குள் கிடைக்கப்பெற வேண்டிய அனைத்து வளர்ச்சிகளான, குழந்தைகளின் நுண்தசை மற்றும் உடல்வளர்ச்சி, மொழிவளர்ச்சி, எண்ணறிவு, எழுத்தறிவு, படைப்பாற்றல், சமூகத்தொடர்பு போன்ற அனைத்து மண்டலங்களிலும் வளர்ச்சியை உறுதிப்படுத்தும் வகையிலும், பள்ளியின் வளர்ச்சியாக முக்கியமாகக் கருதப்படும் மாணாக்கர்களின் சேர்க்கை, மற்றும் அவர்கள் பள்ளியில் மகிழ்ச்சியாகப் பயிலத் தேவையான சூழ்நிலைகளை உருவாக்கித் தரும் விதத்திலும் வகுப்பறையையும், நூலகங்கள், மற்றும் கிரியேட்டிவ் கார்னர், கார்டனிங் போன்ற பல திறமைகளை வளர்க்கும் விதத்தில் அமைக்கப்பட்டு கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றது.

இவையனைத்தும் நமது பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டத்தில் வைத்து அனைத்து பெற்றோர்கள், PTA அங்கத்தினர்கள், MPTA போன்ற அனைவரின் ஒத்துழைப்புடனும் தீர்மானிக்கப்பட்டு வருகின்றது. மேலும் மாணவர்களுக்குத் தேவையான சேமிப்புத் திறனை

வளர்க்கும் விதத்தில் Students Savings Scheme என்ற திட்டத்தின் கீழ் சேமிப்புப் பழக்கத்தை கொண்டு வர இத்திட்டம் உதவியாக இருந்து வருகிறது. 1 முதல் 4-ஆம் வகுப்பு வரையிலான அனைத்து குழந்தைகளுக்கும் தனிமனித வாழ்விலும், சமூக வாழ்விலும் தனது முக்கியத்துவம், மற்றும் சிறப்பைக் காண்பிக்கும் விதத்தில் உள்ள திறமைகளை வளர்த்துக் கொள்ளும் விதமாக Life Skill development programme என்ற திட்டத்தின் மூலமாகவும் Bharath Scout and Guide போன்றவற்றின் மூலமாகவும் வாழ்வின் நெறிமுறைகளைக் கற்றுக் கொடுத்து அவர்களை தன்னம்பிக்கையிலும், சுய ஒழுக்கத்திலும் முன்னேற்ற உதவுகிறது.

இவ்வாறு அனைத்து மண்டலங்களையும் ஒருங்கிணைத்தும், பள்ளியையும் முன்னேற்றத்திற்காகவும் செயல்படுவதே இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

## நோக்கங்கள்:

* 1 முதல் 4-ஆம் வகுப்பு வரையிலான குழந்தைகளுக்கு கிடைக்கப்பெற வேண்டிய புதிய சொற்களை அடையாளம் காணுதல், அடையாளம் கண்ட எழுத்துக்களை பயன்படுத்தி புதிய சொற்கள், வாக்கியங்கள் போன்றவற்றை உருவாக்குதல்.
* தங்களது கருத்துக்களை தாய்மொழியில் கூச்சமின்றி சரளமாக வாய்மொழியாகவும்,

எழுத்து வடிவிலும் வெளியிடுதல்.

* சுற்றுப்புறங்களையும் அவற்றில் உள்ளவைகளைக் குறித்தும், அவற்றின் பெயர்கள், செயல்பாடுகள் அதன் மூலம் எண் அறிவையும் கற்றல்.

* குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியை உறுதிபடுத்தும் செயல்பாடுகளை வரிசைப்படுத்தி வழங்குதல். செய்முறைப் பயிற்சிகள், குழு விளையாட்டுகள், வயதிற்கு ஏற்ற, உடல்வளர்ச்சியை எட்டக்கூடிய செயல்பாடுகளை வடிவமைத்து வழங்குதல்.

* "Life skill development" project மூலம் குழந்தைகளின் வாழ்வின் நெறிமுறைகளைக் கற்றுக் கொடுக்க கொள்ளவும் உதவுகிறது.

* குழந்தைகளின் ஆரோக்கியத்திற்காக சுகாதார வகுப்பிலிருந்து "Iron Folic acid Tablets"-ம் வழங்கப்படுவதன் மூலம் குழந்தைகளின் ஆரோக்கியமும் மேம்படுத்தப்படுகிறது.

* மாணவர்களது சேமிப்புத் திறனை அன்றாட வாழ்வில் மேற்கொள்ளவும், பொருளாதாரப் பிரச்சனைகளை அறிந்து கொள்ளவும் "Students Savings Scheme"-ன் மூலம் தங்களின் சிறு வயதிலிருந்தே கற்றுக் கொள்ள உதவுகிறது.

* பள்ளியின் மூலம் வாசிப்புத் திறனை மேம்படுத்தும் விதத்தில் "பள்ளி நூலகம்" மற்றும் Newspaper வாசிப்பு போன்றவற்றின் மூலம் அவர்களின் வாசிப்புத் திறனை மேம்படச் செய்தல்.

* பள்ளியின் மூலம் மாணவர்களை மதிப்பீடு செய்ய உதவுவது பருவத்தேர்வுகள், இடைநிலைத் தேர்வுகள், முழுஆண்டுத் தேர்வு மற்றும் அலகுத் தேர்வு நடத்துவதன் மூலம் அவர்களின் வளர்ச்சிநிலைகளை அறிய உதவுகிறது.

* மாணவர்களின் உடல் ஆரோக்கியம், மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையில் பள்ளி அளவிலான விளையாட்டுப்போட்டி மற்றும் பிற பள்ளிகளுக்கு இடையேயான அனைத்து வகையான குழந்தைகளின் வயதிற்கேற்ப நடத்தப்படுவதன் மூலம் அவர்களின் உடல்வளர்ச்சி போன்ற அனைத்தையும் மேம்படுத்த உதவுகிறது.

* பள்ளிகளுக்கிடையே நடத்தப்படும் Sasthraalsovam, Kalalsavam, kayigamela, Science Fair, Maths fair மற்றும் பலவற்றின் மூலமாகவும் அவர்களின் திறன்களை வெளிக்கொணர முடிகிறது.

* பள்ளியின் முன்னேற்றத்திற்காகவும், தொடர்ந்து செய்ய வேண்டிய செயல்பாடுகள் குறித்தும் அதை செயல்படுத்தவும், அதற்குத்தேவையான பொருளாதார தேவைகள் போன்றவற்றைப் பற்றியும் நமது பள்ளியின்

PTA, MPTA மற்றும் அங்கத்தினர்களான பெற்றோர்கள், ஆசிரியர்களின் அனைவரது ஆலோசனையின் படியும், ஒத்துழைப்பின் படியும் நடைமுறைபடுத்துவதன் மூலம் மேலும் பள்ளியின் வளர்ச்சியை மேம்படுத்த உதவும்.

⇒ நடப்பு கல்வியாண்டில் இதன் மூலம் குழந்தைகளுக்கு sponser - ஆக புத்தகம், Crayons, Sketch, Pencil, Box, Note, குடை, Brown Cover போன்றவையும் கிடைக்கப் பெற்றது.

* எல்லா மாதங்களிலும் CPTA கூடுவதன் வாயிலாக பெற்றோர்களுக்கும், பள்ளிக்கும், ஆசிரியர்களுக்கும் உள்ள நல்லுறவு மேம்பட்டு அது அவர்களின் குழந்தை செல்வங்களுக்கும், பள்ளிக்கும் இடையேயான நல் உறவையும், முன்னேற்றத்தையும் தருகிறது.

* பள்ளியில் SRG கூடுவதன் வாயிலாக பள்ளியின் வளர்ச்சிக்குத் தேவையான காரணிகளைக் குறித்து கலந்துரையாடி அதன் உயர்ந்த நிலையை எட்டுவதற் -கான படிநிலைகளை கண்டறிந்து நடைமுறைப்படுத்தவும் உதவுகிறது.

மேலும், ஒவ்வொரு வகுப்பிலுள்ள மாணவர்களையும், அவர்களை உயர்த்த தகுந்த படிநிலைகளையும் அறிந்து கலந்துரையாடி நிறைவேற்ற முடிகிறது. வரும் நாட்களில் செய்ய வேண்டிய Action plan போன்றவற்றையும்

குறித்து அனைவரது கருத்துக்களையும், உதவிகளையும் கொண்டு சிறந்த முறையில் நிறைவேற்றி பள்ளியின் தரத்தை உயர்த்த முடியும். [எல்லா வாரமும் வெள்ளிக் கிழமைகளில் கூட்டப்படும்].

## Details of Teachers:

1. Mrs. ChandraMehala. - H.M
2. Mrs. Karthikai Geetha - LPST
3. Mrs. Aruna. C - LPST

# JUNE



| முக்கிய தினங்கள் | செயல்பாடுகள் | கால அளவு | பொறுப்பு, |
|---|---|---|---|
| June 2nd Pravesolsavam [நுழைவு விழா]. | SRG கூட்டம் — திட்டமிடல். துவக்க விழா, சிறப்பு விருந்தினர், புதிய மாணவர், கலைநிகழ்ச்சிகள், இனிப்பு வழங்கல். | 1 day | தலைமையாசிரியை, ஆசிரியர்கள். |
| 6/6/2025 | SRG கூட்டம் - Planning | ½ hour | SRG Convenior. |
| 9/6/2025 | சமுத்திர தினம் - கடல்பற்றிய ICT காண்பித்தல் Quiz நடத்தல். | 1 day | வகுப்பு ஆசிரியர். |
| 13/6/2025 | SRG கூட்டம் — Review, Planning | ½ hour. | SRG convenior, Teachers. |
| 19 to 24 வாசிப்பு வாரம். | புத்தக வாசிப்பு, நூலக வாசிப்பு, வாசிப்புமுலை, ICT பயன்பாடு P.N பணிக்கர் வாழ்க்கை குறிப்பு தயாரித்து வெளியிடல், அறிவிப்பு பலகை உருவாக்கல். | 1 வாரம். | தலைமையாசிரியை, வகுப்பு ஆசிரியர்கள். |
| June (21) யோகா தினம் | உடல் ஆரோக்கியம் விளையாட்டு Drawing, படங்கள் சேகரித்தல் | 1 day | class Teachers. |
| | | 27th | SRG கூட்டம், PTA கூட்டம் |

Scanned with OKEN Scanner

| தினங்கள் | படைப்புகள் | காலஅளவு | பொறுப்புகள். |
|---|---|---|---|
| 4, 11, 18, 25 SRG கூட்டம். | Planning, Review, Teaching aids பயன்பாடு. | 1 day ½ hour | SRG Convenior. வகுப்பு ஆசிரியர்கள் |
| 5/6/2025 P.T.A கூட்டம். | பள்ளியின் வளர்ச்சியை உறுதிப்படுத்துதல். | ½ day | தலைமையாசிரியர் |
| July 21 | சந்திரதினம் ICT பயன்பாடு கண்காட்சி நடத்தல். | 1 day | வகுப்பு ஆசிரியர். |
| இலக்கிய படைப்புகள் [Tamil] | எழுத்துக்களை வடிவமாக எழுதுதல் கற்க கசடற திட்டம் நடைமுறைப்படுத்தல் சுவரொட்டி தயாரித்தல். | Daily work | வகுப்பு ஆசிரியர் SRG — திட்டமிடல் |
| | 6 கதை, கவிதை, கதைப் போன்றவை சேகரித்தல். | Daily work. | வகுப்பு ஆசிரியர் |
| | படைப்புகள் வெளியிடல் பாடல், கதை | | |
| | செய்தித் தாள் வாசிப்பு | June to March. | வகுப்பு ஆசிரியர் |
| | இலக்கிய மன்றம் | June to March | SRG திட்டமிடல். |
| | வாசிப்பு திறன் உருவாக்கல் | June to March | |
| | வாக்கிய அட்டை உருவாக்கம் | ICT பயன்பாடு | |

# AUGUST ஆகஸ்ட்



| முக்கிய நிகழ்வுகள் | செயல்பாடுகள் | கால அளவு | பொறுப்பு. |
|---|---|---|---|
| 1, 8, 22. SRG கூட்டம் | Review, Planning | Each day ½ hour | SRG Convenor. |
| CPTA கூட்டம் நடத்தல். | மாணவர்கள் முன்னேற்ற செயல்பாடுகளை உருவாக்குதல். | மாதம் ஒருமுறை | வகுப்பு ஆசிரியர். |
| July 6th ஹிரோஷிமா day July 9th நாகசாகி தினம். | அறிவியல் மனப்பான்மையை உருவாக்குதல் ICT காணொலி | 2 days | வகுப்பு ஆசிரியர். |
| EVS Activities | | | |
| சுற்றுப்புறம் அறிதல் எளிய பரிசோதனைகளை உருவாக்குதல். | பசுமைப்பள்ளி → பூச்செடிகள் மருத்துவ செடிகள் நட்டு வளர்த்தல். காய்கறித் தோட்டம் அமைத்தல். | June to March | தலைமையாசிரியர் — தலைமை<br>வகுப்பு ஆசிரியர்கள் |
| | விதைகளின் வளர்ச்சியை உற்று கவனித்து குறிப்பு எழுதுதல். | June, July, August | SRG திட்டமிடல், P.TA பங்களிப்பு தோட்டம் அமைக்க — ward member உதவிநாடுதல். Panchayat — seeds. |
| | பரிசோதனைகள், செயல்திட்டம், Field trip, அறிவியல் கிளப், Science club Activities. | June to March. | |

| சிறப்பு தினங்கள் | Activities | காலம் | பொறுப்பு. |
|---|---|---|---|
| AUGUST | அறிவியல் அறிஞர்களைப் பற்றி கலந்துரையாடல். | 1 week | வகுப்பு ஆசிரியர்கள். |
| தின விழா கொண்டாட்டம் August 15th July 11th | சுதந்திரம் பற்றி அறிதல் தலைவர்களை அறிந்து கொள்ள கலைநிகழ்ச்சிகள் நடத்தல். | | |
| உலக மக்கள் தொகை தினம் | உலக மக்கள் தொகை தினம் ICT பயன்பாடு | 1 day | வகுப்பு ஆசிரியர்கள். |
| ஆசிரியர் தினம் | டாக்டர் இராதாகிருஷ்ணன் வாழ்க்கை குறிப்பு ICT பயன்பாடு கலைநிகழ்ச்சிகள் நடத்தல். | 1 day | தலைமையாசிரியர் தலைமை வகுப்பு ஆசிரியர்கள் |
| ஓணம்விழா | ஓணம் கொண்டாட்டம் ஓண விளையாட்டு, பூக்கோலம் அமைத்தல், படம் வரைதல், ஓணவிருந்து | 1 day | P.T.A, தலைமையாசிரியர் ஆசிரியர்கள். |
| ஓசோன் தினம் | பூமியை பாதுகாத்தல் படம் வரைந்து வெளியிடல் | 1 நாள். | வகுப்பு ஆசிரியர்கள் SRG திட்டமிடல். |

| | | | |
|---|---|---|---|
| காந்தி ஜெயந்தி | காந்தியின் வரலாறு புத்தகக் குறிப்பு எழுதுதல்<br>Fancy dress competion [தேசத்தலைவர்கள்] | 1 day | வகுப்பு ஆசிரியர். |
| November 14th<br>Children's day | குழந்தைகள் தினம் ஜவஹர்லால் நேரு வாழ்க்கை குறிப்பு அறிந்து கொள்ளல்<br>ICT பயன்பாடு | 1 day | SRG திட்டமிடல<br>10/11/2025 |
| 7, 14, 21, 28 | SRG கூட்டம் — திட்டமிடல் | Each day ½ hour. | வகுப்பு ஆசிரியர்கள் |
| Christmas Festival | விழாவைப் பற்றி குறிப்பு வெளியிடல். Fancy dress, விருந்து, பட்டம் வரைதல், Christmas tree அமைத்தல். | SRG Planning<br>1 day | வகுப்பு ஆசிரியர் |
| ஜனவரி 26th | Republic day — தேசப்பற்று உணர்வூட்டல்.<br>விழா தொகுப்பு — நிகழ்ச்சிநிரல் தயாரித்தல்,<br>Post making. — விழா நடத்துதல் | One day | தலைமையாசிரியர் தலைமை — வகுப்பு ஆசிரியர்கள், PTA - நடைமுறைப் படுத்தல். |

November



| முக்கிய நோக்கங்கள் | செயல்பாடுகள் | ~~Acti~~ காலம் | பொறுப்பு. |
|---|---|---|---|
| English activities. June to March. All the pupil can simply talk English. [ Communicative English | Activities → Pre test interaction introduce simple sentence making word ladder, making simple Story book. Some events Should write ascending order. Notice, Poster, Diary writing | June to March Daily activities | Class Teachers' SRG planning Cluster wise planning. |
| | They can able to read – Notice board, simple Story. Club activities. Flash card making, Add more lines, using ICT for English Stories. Simple Quotes about – Mahatma Gandhiji, Mother Teresa. Class room interaction between class Teacher & Students. One year plan – Developing Communicative English. | | Class Teacher. SRG planning Cluster wise planning |

## Maths

| Subject | Activities | Period / Time | Incharge |
| --- | --- | --- | --- |
| எண்களைப் பற்றிய அறிவும், திறனும் அடைதல். | * கணித செயல்பாடுகளுக்குத் தேவையான கற்றல் உபகரணங்கள் செய்தலும், வாங்குதலும் <br> * Worksheet தயாரித்தல் <br> * நடைமுறை பிரச்சனைக்கு தீர்வு காணுதல். | June | Class Teacher |
| எண்ணறிவு | * எண்களை அடையாளம் கண்டறிதல் <br> * எண்களை பிரித்தறிந்து கொள்வது. <br> * எண் அட்டை பயன்படுத்துதல் | June | Class Teacher |
| | * கணித விளையாட்டு <br> * மந்திர சதுரம் <br> * புதிர் கணக்குகள் | July | Class Teacher |
| ஏறுவரிசை, இறங்குவரிசை, சிறிய எண் பெரிய எண் என்ற திறனை அடைதல் | * உல்லாசக் கணிதம் <br> * பாம்பும், ஏணியும் <br> * எண்களைக் குறித்த பாடலும், எழுத்து விளையாட்டுக்களும், எண் | August <br> September | |

| | | | |
|---|---|---|---|
| | விளையாட்டுக்களும், பொருட்கள் மூலமாகவும் கண்டறிந்து மாணவர்களுக்குத் தெரியப்படுத்தி, மாணவர்களாகவே கற்று சுயமாக எண்ணத்தை வெளிப்படுத்தச் செய்தல்.. | October. | |

# பள்ளி தின விழா கொண்டாட்டங்கள்.

| முக்கிய தினங்கள் | செயல்பாடுகள் | காலம் | பொறுப்பு. |
|---|---|---|---|
| மிகவுச் செயல்பாடுகள் | • 1, 2 - இரசணைக்குறிப்பு வெளியிடல் | June | PTA |
| | • 3, 4 - அனுபவக் குறிப்பு தயாரித்தல், <br> • கவிதை வரிகளை இரசணையுடன் வாசித்தல். <br> • கதையை நாடகமாக வெளியிடல் <br> • வாசகர்கள் அரங்கம் <br> • திருவிழாக் கொண்டாட்டம் | July | பெற்றோர், மாணவர்கள், ஆசிரியர்கள் |
| | • ஒவ்வொரு வகுப்பிலும் உருவாக்கிய ஒத்த ஓசையுடைய கவிதை வரிகளைக் கண்டறிதல் | August | |
| பள்ளி விழாக்கள். | • குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு தினம், சுற்றுச் சூழல் தினம், சுதந்திர தினம், குழந்தைகள் தினம், கேரள பிறவி தினம், மற்றும் பள்ளியில் கொண்டாடப்படும் | அனைத்து முக்கிய தினங்கள் | மாணவர்கள், ஆசிரியர்கள். |

| | | | |
|---|---|---|---|
| | அனைத்து விழாக்கள், நிகழ்ச்சிகளிலும் பங்கெடுக்க வைப்பதன் மூலம் அவர்களின் திறன்களை மேம்படுத்துதல். | | |
| பெற்றோர், ஆசிரியர் சங்கம் | • எல்லா மாதங்களிலும் PTA meeting கூடி மாணவர்களின் கற்றல் நிலை குறித்து தெரிவித்தல். அதை மேம்படுத்தும் வழிகளையும் கலந்துரையாடல். அதற்குத் தேவையான காரணங்களைப் பெற பெற்றோர்களின் உதவியையும் நாடுதல், அவர்களின் முக்கியத்துவத்தையும் அறிய வைத்தல்.<br>• அனைத்து பள்ளியின் விழாக்களிலும் பெற்றோர்கள் பங்குபெற்று தங்களது குழந்தைகளையும், பள்ளி வளர்ச்சியையும் மேம்படுத்தும் வழிமுறைகளையும் ஒன்றிணைந்து செய்தல். | | |

| | | | |
|---|---|---|---|
| Library :- | • மாணவர்களுக்கு புத்தகத்தைக் கொடுத்து வாசிக்கக் கூறி குறிப்பெடுக்கச் செய்தல்<br>• சிறிய குழந்தைகளுக்கு படங்களைப் பார்த்து பெயர்களைக் கண்டறிதல், கதை சொல்லுதல் போன்றவற்றை செய்யவைத்தல் | தினமும் மதிய உணவு இடைவேளையில் | வகுப்பு ஆசிரியர் |
| | • மாணாக்கர்களுக்கு Table, Chair போன்றவை வழங்கச் செய்தல் | Future Plan [Processing] | PTA ward Member. |
| Co-Curricular Activities | • பள்ளியில் நடைபெறும் கலைவிழா, விளையாட்டுப் போட்டி, அறிவியல் கண்காட்சி, கணித கண்காட்சி போன்றவற்றிலும் மற்றும் மாவட்டம், உபமாவட்ட அளவில் நடக்கும் போட்டிகளிலும் சிறந்த பயிற்சியுடன் பங்கு பெறச் செய்தல். | போட்டிகள் நடத்தப்படும் அறிவிப்பின் காலங்களில் | ஆசிரியர்கள் |
| தினவிழாக்கள், பள்ளி விழாக்கள் | • விழாக்கள் பள்ளியில் நடத்துவதற்கான மேடை (stage) அமைத்துத் தருதல். | | |

| | | | |
|---|---|---|---|
| | • Library புத்தகத்தை எடுத்து உபயோகித்தல்.<br>• தின விழாக் கொண்டாட்டங்களில் பெற்றோர்களை பங்கு பெறச் செய்தல். மாணவர்களையும் பங்குபெற்று அவர்களது திறமைகளைக் காண்பிக்க அறிவுறுத்துதல்.<br>• பள்ளி Assembly-யில் English Prayer நடத்துதல் அவர்களது ஆங்கில அறிவையும் வளர்க்க உதவும் | அனைத்து தினக் கொண்டாட்டங்கள்<br><br>Weekly Twice | மாணவர்கள்<br>ஆசிரியர்கள் |
| **ICT :-**<br><br>ICT பயன்படுத்தி மாணவர்களின் திறனை தொழில் நுட்ப முறையிலும் வளர்த்தல். | * Projecter பயன்படுத்தி ICT-யின் உதவியுடன் படங்கள், கதை, கவிதை, பாடல், சுற்றுச்சூழல், கணித செயல்பாடுகள் போன்ற பல்வேறு செயல்பாடுகளைச் செய்ய வைத்தல்.<br>• குழந்தைகளின் Computer knowledge-ஐயும் Improve செய்தல். | June to March வரை | வகுப்பு ஆசிரியர் |

| | | | |
|---|---|---|---|
| Kitchen | • Store - உடன் கூடிய kitchen அமைத்துத் தருதல். | 1 வருடம் | கண்ணன் தேவன்<br>பள்ளி மேலாண்மை |
| Toilets | • அனைத்து வசதிகள் கொண்ட சிறு மாணவ குழந்தைகள் செல்லவும் வகையில் ஏற்படுத்தித் தருதல் | 1 வருடம் | பள்ளி மேலாண்மை |
| Compound Wall | • பள்ளிக்கும், பள்ளியின் குழந்தைகளின் பாதுகாப்பு கருதி சுற்றுச் சுவர் அமைத்துத் தருதல். | 1 வருடம் | பள்ளி மேலாண்மை |
| Club Activity | • அறிவியல் மன்றம், கணித மன்றம், சமுக அறிவியல் மன்றம், Eco club, விழுக்தி மன்றம் மற்றும் இலக்கிய மன்றங்களின் மூலம் மாணவர்களது சுயமாகச் செய்யும் திறன், சிந்தித்தல், பகுப்பாய்வு செய்தல், தொகுத்தல், வெளியிடுதல் [தனது கருத்துக்களை சுதந்திரமாக] போன்றவற்றின் மூலம் சிந்தனைத் திறன் வளர்கிறது. | ஜீன் முதல் மார்ச் வரை | ஆசிரியர்களும் மாணவர்களும். |

| | | | |
|---|---|---|---|
| • வகுப்பு பெற்றோர் ஆசிரியர் சங்கம் CPTA | • CPTA நடத்துதல் பெற்றோர்களுக்கும், பள்ளி மற்றும் ஆசிரியர்களுக்கான நல்ல உறவு மேம்படவும், மாணவர்களின் முன்னேற்றத்திற்கு பெற்றோரின் பங்கை உணர்ந்து செயல்படுவதன் மூலம் அந்த மாணவன் வெற்றியை அடைதல். | June to March | பெற்றோர் மாணவர்கள் ஆசிரியர்கள் |
| Class Library | • Class Library - மாணவர்கள் தாங்களாகவே சுயமாக கையாண்டு அதன் மூலம் அவற்றிலிருந்து கற்றுக் கொண்டவற்றைக் கொண்டு கதை, விடுகதை, படம் வரைதல் போன்ற பலதிறன்களை அடைதல் | June to March | வகுப்பு ஆசிரியர் |
| Morning, Noon Meal | • காலை உணவுத்திட்டத்தின் மூலம் பயன் பெறுதல்.<br>• Kitchen Garden அமைத்தல் மூலம் பள்ளிக்குத் தேவையான<br>• மதிய உணவு மாணவர்களுக்கு தாய் போல் சுவையாகவும், சத்தானதாகவும், சுத்தமானதாகவும் இருக்க வேண்டும். | June to March<br>பருவநிலைக்கு ஏற்ப பயிரிடுதல் | Teachers.<br>Noon meal Charge. |

முடிவுரை:-

## பொது கல்வி பாதுகாப்புத் திட்டம்

நமது பொதுக்கல்வியை பாதுகாப்பதற்கான அரசாங்கம் உருவாக்கிய திட்டம். இத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதன் மூலம் நமது பள்ளியும், நமது மாணவச் செல்வங்களும் சிறந்தவர்களாகவும் மாறமுடியும் என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு குழந்தையும் அறிவு வளர்ச்சி, மொழி வளர்ச்சி, படைப்பாற்றல், சமூகத்தொடர்பு போ மற்றும் தன்மனித வளர்ச்சி, சமூகவளர்ச்சி போன்ற அனைத்து மண்டலங்களிலும் வளர்ச்சியை உறுதிப்படுத்தும் வகையிலும், பள்ளியின் முக்கிய வளர்ச்சியாகக் கருதப்படும் மாணாக்கர்களின் சேர்க்கையும், பள்ளியின் நிலைத்தன்மையை உறுதிபடுத்தும் வகையிலும் இந்த திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

இதில் பெற்றோர் மற்றும் மாணவர்கள், ஆசிரியர்களின் கருத்தை சுதந்திரமாக வெளியிடுவதன் மூலம் மென்மேலும் பள்ளியின் தரமும் உயர்ந்து நல்ல ஒரு ஆரோக்கியமான சமூகத்தையும், சுற்றுசூழலையும் உருவாக்க முடியும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

வரும் காலங்களில் நமது பள்ளி மிகச்சிறப்பானதாகவும் நமது மாணவர்களின் எதிர்காலம் மிகவும் பிரகாசமானதாக அமையவும் இத்திட்டம் அடித்தளமாக அமையும்

"பொது கல்வியை பாதுகாப்போம்
சிறந்த சமுதாயத்தை உருவாக்குவோம்."